உ
சிவ சிவ

# திருவிடைக்கழித் திருவிசைப்பா

[ கந்தர் கலிவெண்பாவும் கூடியது ]

★

மகா கும்பாபிஷேக மலர்

12—7—54

★

ஸ்ரீ காசி மடம் : : [illegible] திருப்பனந்தாள்

# திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து வெளியீடுகள்

| | | | ரூ. | அ. |
|---|---|---|---|---|
| 1 | விநாயகர் திருமுறை | ... | 0 | 1 |
| 2 | ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு -டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் ... | ... | 6 | 0 |
| 3 | சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம் | ... | 3 | 0 |
| 4 | திருஞான சம்பந்தர் தேவாரம் ... | ... | 2 | 8 |
| 5 | திருநாவுக்கரசர் தேவாரம் ... | ... | 1 | 0 |
| 6 | சுந்தரர் தேவாரம் ... | ... | 1 | 0 |
| 7 | திருவாசகம் ... | ... | 0 | 6 |
| 8 | திருக்கோவையார்-பேராசிரியர் உரை | ... | 2 | 0 |
| 9 | ஒன்பதாம் திருமுறை-திருவிசைப்பா திருப்பல்லாண்டு ... | ... | 0 | 9 |
| 10 | திருமந்திரம் ... | ... | 1 | 8 |
| 11 | பதினோராந் திருமுறை ... | ... | 1 | 4 |
| 12 | அம்மையார்-அற்புதத் திருவந்தாதி | ... | 0 | 4 |
| 13 | திருக்கைலாய ஞானவுலா ... | ... | 0 | 8 |
| 14 | பெரிய புராணம் ... | ... | 2 | 8 |
| 15 | அகத்தியர் தேவாரத் திரட்டு - குறிப்புரை | ... | 0 | 6 |
| 16 | திருவிளையாடற் புராணம் ... | ... | 3 | 0 |
| 17 | தாயுமான சுவாமிகளின் பாடல் ... | ... | 1 | 4 |
| 18 | கந்தபுராணச் சுருக்கம் ... | ... | 1 | 12 |
| 19 | கந்தபுராணம்-முதல் மூன்று காண்டங்கள் ஆராய்ச்சிக் குறிப்புடன் ... | ... | 2 | 12 |
| 20 | ஷை யுத்த காண்டம் தேவ காண்டம் | ... | 1 | 12 |
| 21 | ஷை தக்ஷ காண்டம் குறிப்புரை ... | ... | 1 | 8 |
| 22 | கந்தபுராண வசனம் ... | ... | 2 | 8 |
| 23 | கந்தர் அலங்காரம் குறிப்புரை ... | ... | 0 | 4 |
| 24 | கந்தர் அநுபூதி ஷை ... | ... | 0 | 2 |
| 25 | கந்தர் கலிவெண்பா—ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது ... | | 0 | 6 |
| 26 | கந்தர் கலிவெண்பா-மூலம் மட்டும் | ... | 0 | 1 |

மதுரைத் தமிழ்ச் சங்கம் * THE MADURA TAMIL SANGAM

உ

செந்திலாண்டவன் துணை

# திருவிடைக்கழித்

# திருவிசைப்பா

[கந்தர் கலிவெண்பாவும் கூடியது]

★

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்

**ஸ்ரீ-ல-ஸ்ரீ**

**காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்**

அவர்கள் ஆணையின் வண்ணம்

ஸ்ரீ காசிமடத்து இளவரசு

**ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள்**

அவர்களால் வெளியிடப்பெற்றது

★

ஜய ஆண்டு ஆனித் திங்கள் 28-ம் நாள்

ஸ்ரீ காசி மடம் :: திருப்பனந்தாள்

உ

சிவ சிவ

# சிவநாமப் பயன்

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே.

—திருமந்திரம்.

# முன்னுரை

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

—கந்தர் அநுபூதி.

**திருவிடைக்கழி** என்பது சோழ நாட்டுத் தலங்களுள் ஒன்று; திருக்கடவூர் என்னும் தலத்திற்கு மேற்கிலுள்ளது; சேந்தனர் பாடிய திருவிசைப்பாப் பதிகம் பெற்றது; மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றுனும் சிறப்புற்று விளங்குவது; ஸ்ரீ முருகப்பெருமான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பது; சேரமான் பெருமாள் திருக்கயிலாயத்தில் அருளிய **திருக்கைலாய ஞானவுலா** என்னும் நூல் மாசாத்தரால் வெளியிடப்பெற்ற தமிழ் நாட்டுத் **திருப்பிடவூரை** அண்மையில் கொண்டுள்ளது.

இத்தகைய பெருஞ் சிறப்புக்கள் வாய்ந்த இத்தலத்து ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் திருப்பணி செய்யப் பெற்று ஜயஆண்டு ஆனித்திங்கள் 28-ம் நாள் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கும் ஏனைய பரிவாரங்களுக்கும், இத் திருக்கோயில் டிரஸ்டிகளாகிய திரு. K. கனகசபைப் பிள்ளை முதலியவர்களுடைய பெருமுயற்சியால் **அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்** மிகச் சிறப்பாக நடத்தப் பெறுகின்றது. இவ்வெளியீடு, கும்பாபிஷேக நினைவாகத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து இலவச வெளியீடாக அன்பர்க்கு வழங்கப் பெறுகின்றது.

இவ்வெளியீட்டில் சேந்தனர் வரலாறும், அவர் திருவிடைக்கழியில் பாடிய திருவிசைப்பாவும், செந்திலாண்டவன் திருவருள் பாலிக்கப்பெற்ற ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளின்

வரலாறும், அவர் பாடியருளிய குட்டிக் கந்த புராணம் எனத் தகும் முருகன் புகழ் மாலையாகிய திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பாவும் அடங்கியுள்ளன. இங்ஙனம் அமைக்குமாறு அருள்பாலித்து இச்சிறு நூலை வெளியிடச் செய்த ஸ்ரீ காசி மடத்துத் தலைவர் **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களுக்குத்** தமிழ் நாடு கடப்பாடுடையதாகும்.

இச்சிறு நூலை வெளியிடும் பணியில் ஈடுபடுத்தருளிய எங்கள் தலைவர் **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள்** அவர்கள் திருவடிகளை மனமொழி மெய்களால் வழிபடுகின்றேன்.

இதனை அச்சிடுவதற்கான பணிகள் புரிந்த திருச்சிராப் பள்ளித் தமிழாசிரியர் வித்துவான் **தி. பட்டுச்சாமி ஓதுவார்** அவர்களுக்கும், இக்குறிப்புக்களைத் தயாரித்த திருப்பனந்தாள் திரு. **K. M. வேங்கடராமையா** M. A., B. O. L., அவர்களுக்கும் செந்திலாண்டவன் திருவருள் சிறப்பதாக.

இங்ஙனம்,

**மகாலிங்கத் தம்பிரான்**
இளவரசு

ஸ்ரீ காசிமடம்
திருப்பனந்தாள்
12—7—'54

உ

செந்திலாண்டவன் துணை

# திருவிடைக்கழித் தல வரலாறு

---

**திருவிடைக்கழி** என்பது சோழவள நாட்டிலே காவிரியின் தென்பால் அட்ட வீரட்டத் தலங்களில் ஒன்றாகிய திருக்கடவூருக்குத் தென்மேற்கிலும் தில்லையாடி என்னும் தலத்திற்கு மேற்கிலும் உள்ள முருகப்பெருமான் எழுந்தருளியுள்ள திருத்தலமாகும். இத்தலத்தை '**மகிழாரண்யம்**' எனவும் வழங்குவர்.

இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற இம் மூன்றினாலும் சிறப்புற்றுத் திகழ்வது ; திருமாலும், பிரமனும், வசிட்டரும், முசுகுந்தச் சக்கரவர்த்தியும், அருணகிரிநாதரும், சேந்தனாரும், மற்றும் சிவனடியார் பலரும் பூசித்து நற்பேறு பெறுதற்கு இடமாக விளங்கியது.

இப்பதியில் திருக்குரா நீழலின்கீழ் எழுந்தருளியுள்ள **ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுள்** தம்மை வழிபடும் அன்பர்களுக்கு இம்மை, மறுமைப் பயன்களோடு பேரின்ப வீட்டையும் அருள வல்லவர்.

---

உ

சிவ சிவ

# ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி துதி

---

அருவமும் உருவு மாகி
அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப்
பிழம்பதோர் மேனி யாகக்
கருணைகூர் முகங்கள் ஆறுங்
கரங்கள்பன் னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்
குதித்தனன் உலக முய்ய.

வீறு கேதனம் வச்சிரம் அங்குசம் விசிகம்
மாறி லாதவேல் அபயமே வலமிடம் வரதம்
ஏறு பங்கயம் மணிமழுத் தண்டுவில் இசைந்த
ஆறி ரண்டுகை அறுமுகங் கொண்டுவேள் அடைந்தான்.

—கந்த புராணம்

# சேந்தனார் வரலாறு

—:o:—

* **சேந்தனார்** என்பவர் திருவிசைப்பா அருளிய சிவனடியார் ஒன்பதின்மருள் ஒருவர். இவர் திருவீழிமிழலையில் வாழ்ந்த சிவ ஞானியாவர். இவர் பட்டினத்தடிகளின் அமைச்சராய் இருந்த பொழுது பட்டினத்தடிகளின் ஏவலால் பொருளைப் பலர்க்கும் கொள்ளை கொடுத்தாற்போல வழங்கியதால், இவரைச் சோழ அரசன் சிறையிலிட்டான். தமது ஆசிரியரது அருளால் இவர் சிறை நீங்கித் தில்லைக்குச் சென்றார். அங்கு விறகு விற்பதால் வரும் ஊதியத்தைக்கொண்டு நாடோறும் ஒரு சிவனடியாரை உண்பித்து வந்தார். சிவபெருமானே நள்ளிரவில் அவர் வீட்டுக்குச் சென்று கூழுணவு பெற்று அதன் மிகுதியைத் தமது திருமேனியிற் காட்டிச் சேந்தனாரது பேரன்பை உலகுக்கு அறிவித்தனர் என்பர். இவர் நடராஜப் பெருமானுக்குத் தவிட்டை அமுதாக நிவேதனம் செய்தார் என்றும் கூறப்படுகின்றது. இவர் ஒருசமயம் தில்லையில் இருக்குங்கால் தேர் செல்லாதிருந்தபோது திருப்பல்லாண்டு பாடித் தேர் செல்லும்படி $ செய்தார்.

சேந்தனார் திருவீழிமிழலை, திருவாவடுதுறை, திருவிடைக்கழி என்னும் தலங்களுக்குத் திருவிசைப்பா அருளியுள்ளார்.

பட்டினத்தடிகளின் நன்மதி அமைச்சராகிய சேந்தனாரும், திருவிசைப்பா அருளிய சேந்தனாரும் வேறுவேறானவர் என்று சிலர் கருதுகின்றனர். திருவிசைப்பா ஆசிரியருள்ளே முதல்வ

---

* இச்சேந்தனாரே அன்றித் திவாகரம் என்னும் நிகண்டு நூல் இயற்றிய சேந்தனார் என்ற ஒருவரும், வீரசோழியம் என்னும் இலக்கண நூலை இயற்றிய புத்தமித்திரன் எனும் சேந்தன் என்ற ஒருவரும், சேந்தனார் என்ற பெயரில் இருந்துளர் என்பது வரலாற்றால் அறியக்கிடக்கின்றது.

$ இவ்வற்புதத்தை நினைவு கூர்தற்பொருட்டுத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீ-ல-ஸ்ரீ **காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்** "சிதம்பரத்தில் பல்லாண்டு விளக்கு நிதி" என்ற ஒரு பேரறக் கட்டளையை நியமித்துத் தேர்த்திருவிழா நாளில் திருப்பல்லாண்டு ஓதச் செய்துள்ளார்கள்.

ராகிய திருமாளிகைத் தேவரும் இச்சேந்தனாரும் ஒருவரே யாவர் என்று பல ஆராய்ச்சியாளரும் ஒப்பக் கருதுகின்றனர்.

சேந்தனார் நாங்கூரினர் என்று "நாங்கூர்ச் சேந்தனை வேந்துவிட்ட, கைத்தனை நீக்கி யென்முன் காட்டுவெண் காட்டுளானே" என்ற பட்டினத்தடிகள் பாடலால் அறியலாம் என்றும், "செப்புறைச் சேந்தன்" என்று திருவிடைக்கழித் திருவிசைப்பாவில் வந்துள்ளமையால் இவர் ஊர் "செப்புறை" என்பதாகலாம் என்றும் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

இவர் பட்டினத்தடிகளின் அமைச்சர் என்று அறிவதால் காலம் கி. பி. 10-ம் நூற்றாண்டின் இறுதி ஆகும்.

திருவிடைக்கழித் திருவிசைப்பா முருகப்பெருமான் பேரில் பாடப்பெற்றது. இப்பதிகத்தில் "நற்றாய் இரங்கல்" என்னும் அகப்பொருட்டுறையில் பல பாடல்கள் உள்ளன.

சம்பந்தருக்கும் அப்பருக்கும் படிக்காசு அருளியதைத் திருவீழிமிழலைத் திருவிசைப்பாவில் சேந்தனார்

"பாடலங் காரப் பரிசில்கா சருளிப்
பழுத்தசெந் தமிழ்மலர் சூடி
நீடலங் காரத் தெம்பெரு மக்கள்
நெஞ்சினுள் நிறைந்துநின் றானை"

என்று குறித்துள்ளார்.

உ

செந்திலாண்டவன் துணை

**சேந்தனர் அருளிய**

# திருவிடைக்கழித் திருவிசைப்பா*

**பண் – பஞ்சமம் [ 9-ஆம் திருமுறை ]**

திருச்சிற்றம்பலம்

**மா**லுலா மனம்தந்(து) என்கையிற் சங்கம்
வவ்வினான் மலைமகள் மதலை
மேலுலாந் தேவர் குலமுழு தாளுங்
குமரவேள் **வள்ளிதன் மணாளன்**
சேலுலாங் கழனித் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
வேலுலாந் தடக்கை வேந்தன்என் சேந்தன்
என்னும்என் மெல்லியல் இவளே. 1

**இ**வளைவார் இளமென் கொங்கைபீர் பொங்க
எழில்கவர்ந் தான்இளங் காளை
கவளமா கரிமேல் கவரிசூழ் குடைக்கீழ்க்
கனகக்குன் றெனவருங் கள்வன்

---

* இப்பதிகம் அந்தாதித் தொடை பெற்று முருகக்கடவுள் தோத்திரமாகவும், அது முருகக்கடவுள் மீது காதல்கொண்ட ஒரு பெண்ணின் நற்றுய் இரங்கிக் கூறிய மொழிகளாகவும் அமைந்ததாகும்.

1. மால் — காதல். சங்கம் — சங்கினாலாகிய வளையல். மலைமகள் மதலை — முருகன். மலைமகள் — உமை. மேல்உலாம் — விண்ணுலகத்தில் வாழ்கின்ற. சேல் — சேல்மீன். கழனி — வயல். குரா — ஒருவகைமரம். வேந்தன் என் சேந்தன் — சேந்தன் என் தலைவன். சேந்தன் — சிவந்த நிறத்தையுடையவன்; முருகன். என்னும் — என்று சொல்லுவாள். என் என்றது தாய். மெல்லியள் என்றது மகள்.

2. வார் — கச்சு. பீர் — பசலைநிறம். எழில் — இயற்கையழகு. கவளம் — சோற்றுத்திரள். கரி — யானை. கனகக்குன்று என — பொன் மலைபோல. கள்வன் — காண்போர் மனத்தைக் கொள்ளை கொள்பவன்; முருகன். திவளம் — விளக்கம் பொருந்திய. நங்கை யானை — தெய்வ யானை. குழகன் — மணாளன். கோ — இறைவன்; தலைவன்.

திவளமா ளிகைசூழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
குவளை மாமலர்க்கண் **நங்கையா ளைக்குங்**
**குழகன்**நல் அழகன்நங் கோவே. 2

**கோவி**னைப் பவளக் குழமணக் கோலக்
குழாங்கள் சூழ்கோழிவெல் கொடியோன்
**காவல்நற் சேனையென் னக்**காப் பவன்என்
பொன்னை மேகலை கவர்வானே
தேவினற் றலைவன் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
தூவிநற் பீலி மாமயில் ஊருஞ்
சுப்பிர மண்ணியன் தானே. 3

**தா**னமர் பொருது வானவர் சேனை
மடியச்சூர் மார்பினைத் தடிந்தோன்
மானமர் தடக்கை வள்ளல்தன் பிள்ளை
மறைநிறை சட்டறம் வளரத்
தேனமர் பொழில்சூழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
கோனமர் கூத்தன் குலவிளங் களி(று)என்
கொடிக்கிடர் பயப்பதுங் குணமே. 4

**கு**ணமணிக் குருளைக் கொவ்வைவாய் மடந்தை
படுமிடர் குறிக்கொளா(து) அழகோ?
மணமணி மறையோர் வானவர் வையம்
உய்யமற்(று) அடியனேன் வாழத்

---

3. பவளம் — பவளம்போன்ற நிறங்கொண்டு. குழ — இளமை பொருந்திய. காவல் நற்சேனை என்ன — சேனாதிபதியைப்போல, பொன்னை — பொன்போன்ற மகளை, மேகலை — ஒருவகை அணி, தேவின் — தேவர்களுக்கு. தூவி — இறகு. பீலி — தோகை. ஊரும் — நடத்தும்.

4. தான் அமர் பொருது — தான் போர்புரிந்து. சூர் — சூரபன்மன். மான் அமர் — மானை ஏந்திய. மறை நிறை—வேதங்களில் மிகுதியாகக் கூறப்பட்டுள்ள. சட்டறம் (ஷட்+அறம்) அறுவகைப் புண்ணியம்;

[library stamp]



திணமணி மாடத் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
கணமணி பொருநீர்க் கங்கைதன் சிறுவன்
**கணபதி** பின்னிளங் கிளையே. 5

**கி**ளையிளஞ் சேய்அக் கிரிதனைக் கீண்ட
ஆண்டகை கேடில்வேற் செல்வன்
வளையிளம் பிறைச்செஞ் சடைஅரன் மதலை
கார்நிற மால்திரு மருகன்
திளையிளம் பொழில்சூழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
முளையிளங் களி(று)என் மெய்குழற் சிறுமிக்(கு)
அருளுங்கொல்? முருகவேள் பரிந்தே. 6

**ப**ரிந்தசெஞ் சுடரோ பருதியோ மின்னோ
பவளத்தின் குழவியோ பசும்பொன்
சொரிந்தசிந் துரமோ தூமணித் திரளோ
சுந்தரத்(து) அரசிது வென்னத்

---

அஃது ஈதல், ஏற்றல், ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல் என்பன. கோன் — இறைவன். கூத்தன் — சிவபெருமான். குலம் — மேன்மை பொருந்திய; இளங் களிறு — இங்கு முருகன். குணமே—நல்ல குணமோ?

5. குணம் அணி — நற்குணம் பொருந்திய. குருளை — அழகிய சிறுமி. குறிக்கொளாது — கவனியாமல் இருப்பது. மணம் அணி — கூட்டமும் பெருமையும் பொருந்திய. திண் அம் அணிமாடம்—உறுதியும் அழகும் வாய்ந்த இரத்தின மாளிகை. கணம் மணி—மணித்திரள்களை. பொரு—தள்ளிக்கொண்டு ஓடும். கங்கை தன் சிறுவன் — முருகன். பின் — பின்பிறந்த.

6. கிளை — ஒளிபொருந்திய; அன்பர்க்கு உறவாக இருக்கும் எனினுமாம். சேய் — குமரன். கிரி — கிரவுஞ்சமலை. கீண்ட — பிளந்த. ஆண்டகை — ஆண் தன்மையுடையவன்; முருகன். வளை — வளைந்த. கார்நிறமால் — திருமால். மருகன் — வழித்தோன்றல். திளை — நெருங்கிய. முளை இளம் — மிக இளைய. மொய்குழல் — அடர்ந்த கூந்தல். அருளுங்கொல் — அருளுவானோ? பரிந்து — இரங்கி.

7. பரிந்த — அன்புடன் கூடிய. பரிதி — சூரியன். மின் — மின்னல் குழவி — கொழுந்து. சிந்துரமோ — செவ்வொளியோ; சுந்தரத்து —

தெரிந்தவை திகர்வாழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
வரிந்தவெஞ் சிலைக்கை மைந்தனை அஞ்சொல்
மையல்கொண் டையுறும் வகையே. 7

வகைமிகும் அசுரர் மாளவந்(து) உழிஞை
வானமர் விளைத்ததா ளாளன்
புகைமிகும் அனலிற் புரம்பொடி படுத்த
பொன்மலை வில்லிதன் புதல்வன்
திகைமிகு கீர்த்தித் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
தொகைமிகு நாமத் தவன்திரு வடிக்(கு)என்
துடியிடை மடல்தொடங் கினளே. 8

தொடங்கினள் மடல்என்(று) அணிமுடித் தொங்கல்
புறஇத ழாகிலும் அருளான்
இடங்கொளக் குறத்தி திறத்திலும் இறைவன்
மறத்தொழில் வார்த்தையும் உடையன்
திடங்கொள்வை திகர்வாழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
மடங்கலை மலரும் பன்னிரு நயனத்(து)
அறுமுகத்(து) அமுதினை மருண்டே. 9

அழகுக்கு, என்ன — என்று, வைதிகர் — வேதவிதிப்படி ஒழுகுபவர்; அந்தணர், வரிந்த — கட்டுகள் பொருந்திய, சிலை — வில், அம்சொல்— அழகிய சொல்லையுடைய பெண், மையல் — மயக்கம்.

8. வகைமிகும் — பலவகைப்பட்ட, அசுரர், தானவர், தகுவர், தைத்தியர் முதலான. உழிஞை — உழிஞைமாலை; இது வெற்றி மாலைகளுள் ஒன்று, தாளானன் — முயற்சியுடையவன், புரம் — முப்புரம். திகைமிகும் — எல்லாத் திக்குகளையும் கடந்த, தொகைமிகு நாமம் — ஆயிர நாமம். (சகஸ்திரநாமம்). என் துடியிடை — உடுக்கை போன்ற இடையையுடைய என் மகள். மடல் தொடங்கினள்—பனை மடலால் ஆகிய குதிரை ஏறத் தொடங்கினள்.

9. தொங்கல்—மாலை ; அருளான்—அருள் செய்யான் ; இடம்கொள் அ குறத்தி—இடது பாகத்து அமர்ந்த வள்ளியம்மையார்; மறத் தொழில் வார்த்தை—கோபத்தைத் தெரிவிக்கும் செய்கையையும்

**ம**ருண்டுறை கோயில் மல்குநன் குன்றப்
பொழில்வளர் மகிழ்**திருப் பிடவூர்**
வெருண்டமான் விழியார்க்(கு) அருள்செயா விடுமே
விடலையே எவர்க்கும்மெய் யன்பர்
தெருண்டவை திகழ்வாழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
குருண்டபூங் குஞ்சிப் பிறைச்சடை முடிமுக்
கண்ணுடைக் கோமளக் கொழுந்தே. 10

**கொ**ழுந்திரள் வாயார் தாய்மொழி யாகத்
தூய்மொழி அமரர்கோ மகனைச்
செழுந்திரட் சோதிச் **செப்புறைச் சேந்தன்**
வாய்ந்தசொல் இவைசுவா மியையே
செழுந்தடம் பொழில்சூழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
எழுங்கதிர் ஒளியை ஏத்துவார் கேட்பார்
இடர்கெடும் மாலுலா மனமே. 11

திருச்சிற்றம்பலம்

---

*சொல்லையும் ; திடம்—மன உறுதி ; மடங்கல்—சிங்கத்தையொப்பவன் ; மலரும்—விரிகின்ற ; மருண்டு—காதலித்து மயங்கி.*

*10. மருண்டு உறை கோயில்—விரும்பி உறைகின்ற திருக்கோயில் கள்; திருப்பிடவூர்—ஓர் ஊர் ; செயா விடுமே—செய்யாமல் போவானோ? விடலை—மணவாளன்; காளைப் பருவமுடையவன்; தெருண்ட—தெளிந்த அறிவினையுடைய ; குருண்ட பூங்குஞ்சி—முன் கொண்டையையுடைய அழகிய தலைமயிர் ; முக்கண் உடை கோமளக் கொழுந்து—மூன்று கண் களையுடைய அழகிய வடிவுகொண்ட சிவபெருமானுடைய குமரன் ; முருகன்.*

*11. தாய்மொழி—நற்றாய் வாக்காக. தூய்மொழி அமரர் கோமகன் செழுந்திரட்சோதி—முருகக்கடவுள் ; செப்புறை—இது சேந்தனார் பிறப்பிடம் என்பர் ; எழுங்கதிரொளி—சூரியனைப்போல ஒளி வடிவின னான முருகப்பெருமான். மாலுலா மனமே—மயக்க உணர்வினையுடைய மனமே.*

# ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் வரலாறு

—:o:—

ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் ஸ்ரீவைகுண்டத்தில் அவதரித்தார்; திருச்செந்தூர் முருகப் பெருமான் அருளால் ஐந்து ஆண்டில் ஊமை நீங்கிக் 'கந்தர் கலிவெண்பா'ப் பாடி அருள்பெற்றார்; மதுரை மீனாட்சியம்மைமீது 'பிள்ளைத் தமிழ்' பாடி அம்மையால் முத்தாரம் அணியப்பெற்றார்; திருமலை நாயக்க மன்னன் விருப்பத்திற்கு இணங்க 'நீதிநெறி விளக்கம்' என்னும் நூலை அருளினார்; தருமை ஸ்ரீ மாசிலாமணி தேசிகரை வழிபட்டுப் 'பண்டார மும்மணிக் கோவை' பகர்ந்தார்; ஆரூர் வேளூர், தில்லை தரிசித்து, மாலை, கோவை முதலியன பாடினார்; காசி சென்று 'சகலகலாவல்லி மாலை' 'காசிக் கலம்பகம்' முதலியன அருளினார்; சிங்கத்தின் மீதேறிச்சென்று முகலாய மன்னனைக்கண்டு அவன் உதவியால் கேதார மந்திரம், கேதாரத் துறை, அறச்சாலை முதலியன அமைத்தார்; வெள்ளியம்பல வாணத் தம்பிரான் முதலியோருக்கு வித்தியாகுருவாகத் திகழ்ந் தார்.

இச்செயற்கரிய செயல்கள் புரிந்த முனிவர் பெருமானின் நினைவு உலகுக்கு நன்னெறிகாட்டி இன்பந் தருவதாகும்.

இவர் காலம் கி. பி. 17-ம் நூற்றாண்டின் முற்பகுதி ஆகும்.

---

உ

செந்திலாண்டவன் துணை

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிய

# திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா

1 பூமேவு செங்கமலப் புத்தேளும் தேறரிய
பாமேவு தெய்வப் பழமறையும்—தேமேவு

2 நாதமும்நா தாந்த முடிவும் நவைதீர்ந்த
போதமும் காணாத போதமாய்—ஆதிநடு

3 அந்தங் கடந்தநித்தி யானந்த போதமாய்ப்
பந்தந் தணந்த பரஞ்சுடராய்—வந்த

4 குறியும் குணமும்ஒரு கோலமுமற்(று) எங்கும்
செறியும் பரம சிவமாய்—அறிவுக்(கு)

5 அனாதியாய் ஐந்தொழிற்கும் அப்புறமாய் அன்றே
மனாதிகளுக்(கு) எட்டா வடிவாய்த்—தனாதருளின்

6 பஞ்சவித ரூப பரசுகமாய் எவ்வுயிர்க்கும்
தஞ்சமென நிற்கும் தனிப்பொருளாய்—எஞ்சாத

7 பூரணமாய் நித்தமாய்ப் போக்குவர வும்புணர்வும்
காரணமும் இல்லாக் கதியாகித்—தாரணியில்

8 இந்திரசா லம்புரிவோன் யாவரையும் தான்மயக்கும்
தந்திரத்தில் சாராது சார்வதுபோல்—முந்தும்

9 கருவின்றி நின்ற கருவாய் அருளே
உருவின்றி நின்ற உருவாய்த்—திரிகரணம்

10 ஆகவரும் இச்சை அறிவுஇயற்ற லால்இலய
போகஅதி காரப் பொருளாகி—ஏகத்(து)

11 உருவும் அருவும் உருவருவும் ஆகிப்
பருவ வடிவம் பலவாய்—இருள்மலத்துள்

12 மோகமுறும் பல்லுயிர்க்கு முத்திஅளித் தற்குமல
பாகமுற வேகடைக்கண் பாலித்துத்—தேகமுறத்

13 தந்த அருவுருவஞ் சார்ந்தவிந்து மோகினிமான்
பெந்த முறவே பிணிப்பித்து—மந்த்ரமுதல்

14 ஆறத்து வாவு(ம்) அண்டத்(து) ஆர்ந்தஅத்து வாக்களுமுற்
கூறத் தகுஞ்சிமிழ்ப்பிற் கூட்டுவித்து—மாறிவரும்
15 ஈரிரண்டு தோற்றத்(து) எழுபிறப்புள் யோனிஎண்பான்
ஆரவந்த நான்குநூ றுயிரத்துள்—தீர்வரிய
16 கன்மத்துக்(கு) ஈடாய்க் கறங்கும் சகடமும்போல்
சென்மித்(து) உழலத் திரோதித்து—வெந்நிரய
17 சொர்க்காதி போகமெலாம் துய்ப்பித்துப் பக்குவத்தால்
நற்கா ரணஞ்சிறிது நண்ணுதலும்—தர்க்கமிடும்
18 தொன்னூற் பரசமயந் தோறும் அதுவதுவே
நன்னூல் எனத்தெரிந்து நாட்டுவித்து—முன்னூல்
19 விரதமுத லாயபல மெய்த்தவத்தின் உண்மைச்
சரியைகிரி யாயோகஞ் சார்வித்(து)—அருள்பெருகு
20 சாலோக சாமீப சாரூப மும்புசிப்பித்(து)
ஆலோகந் தன்னை அகற்றுவித்து—நால்வகையாம்
21 சத்திநி பாதம் தருதற்(கு) இருவினையும்
ஒத்துவருங் காலம் உளவாகிப்—பெத்த
22 மலபரி பாகம் வருமளவில் பன்னாள்
அலமருதல் கண்ணுற்(று) அருளி—உலவா(து)
23 அறிவுக்(கு) அறிவாகி அவ்வறிவுக்(கு) எட்டா
நெறியிற் செறிந்தநிலை நீங்கிப்—பிறியாக்
24 கருணை திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக்
குருபரனென்(று) ஓர்திருப்பேர் கொண்டு-திருநோக்கால்
25 ஊழ்வினையைப் போக்கி உடலறுபத் தெட்டுநிலம்
ஏழு(ம்)அத்து வாக்கள் இருமூன்றும்—பாழாக
26 ஆணவ மான படலங் கிழித்(து) அறிவிற்
காணரிய மெய்ஞ்ஞானக் கண்காட்டிப்—பூணும்
27 அடிஞானத் தாற்பொருளும் ஆன்மாவுங் காட்டிக்
கடியார் புவனமுற்றுங் காட்டி—முடியாது
28 தேக்குபர மானந்தத் தெள்ளமுத மாகிஎங்கும்
நீக்கமற நின்ற நிலைகாட்டிப்—போக்கும்
29 வரவும் நினைப்பும் மறப்பும் பகலும்
இரவும் கடந்(து) உலவா இன்பம்—மருவுவித்துக்

30 கன்மமலத் தார்க்குமலர்க் கண்மூன் றும் தாழ்சடையும்
வன்மழுவும் மானுமுடன் மால்விடைமேல்-மின்னிடத்துப்
31 பூத்த பவளப் பொருப்(பு)ஒன் று வெள்ளிவெற்பில்
வாய்த்தனைய தெய்வ வடிவாகி—மூத்த
32 கருமமலக் கட்டறுத்துக் கண்ணருள் செய்(து)உள்நின்(று)
ஒருமலத்தார்க்(கு) இன்பம் உதவிப்—பெருகியெழு
33 மூன்(று)அவத்தை யுங்கழற்றி முத்தருட னேஇருத்தி
ஆன்றபர முத்தி அடைவித்துத்—தோன்றவரும்
34 யானெனதென்(று) அற்ற இடமே திருவடியா
மோனபரா னந்த முடியாக—ஞானம்
35 திருவுருவா இச்சை செயலறிவு கண்ணா
அருளதுவே செங்கை அலரா—இருநிலமே
36 சந்நிதியா நிற்குந் தனிச்சுடரே! எவ்வுயிர்க்கும்
பின்னமற நின்ற பெருமானே!—மின்னுருவம்
37 தோய்ந்தநவ ரத்நச் சுடர்மணியாற் செய்தபைம்பொன்
வாய்ந்த கிரண மணிமுடியும்—தேய்ந்தபிறைத்
38 துண்ட(ம்)இரு மூன்றுநிரை தோன்றப் பதித்தனைய
புண்டரம் பூத்தநுதற் பொட்டழகும்—விண்ட
39 பருவமலர்ப் புண்டரிகம் பன்னிரண்டு பூத்தாங்(கு)
அருள்பொழியும் கண்மலரீ ராறும்—பருதி
40 பலவும் எழுந்துசுடர் பாலித்தாற் போலக்
குலவு மகரக் குழையும்—நிலவுமிழும்
41 புன்முறுவல் பூத்தலர்ந்த பூங்குமுதச் செவ்வாயும்
சென்மவிடாய் தீர்க்கும் திருமொழியும்—வின்மலிதோள்
42 வெவ்வசுரர் போற்றிசைக்கும் வெஞ்சூர னைத்தடிந்து
தெவ்வ(ர்)உயிர் சிந்தும் திருமுகமும்—எவ்வுயிர்க்கும்
43 ஊழ்வினையை மாற்றி உலவாத பேரின்ப
வாழ்வுதரும் செய்ய மலர்முகமும்—சூழ்வோர்
44 வடிக்கும் பழமறைகள் ஆகமங்கள் யாவும்
முடிக்குங் கமல முகமும்—விடுத்தகலாப்
45 பாச இருள்துரந்து பல்கதிரிற் சோதிவிடும்
வாச மலர்வதன மண்டலமும்—நேசமுடன்

46 போகமுறும் வள்ளிக்கும் புத்தேளிர் பூங்கொடிக்கும்
மோகம் அளிக்கும் முகமதியும்—தாகமுடன்

47 வந்தடியிற் சேர்ந்தோர் மகிழ வரம்பலவும்
தந்தருளுந் தெய்வமுகத் தாமரையும்—கொந்தவிழ்ந்த

48 வேரிக் கடம்பும் விரைக்குரவும் பூத்தலர்ந்த
பாரப் புயசயிலம் பன்னிரண்டும்—ஆரமுதம்

49 தேவர்க்(கு) உதவுந் திருக்கரமும் சூர்மகளிர்
மேவக் குழைந்தணைந்த மென்கரமும்—ஓவாது

50 மாரி பொழிந்த மலர்க்கரமும் பூந்தொடையல்
சேர அணிந்த திருக்கரமும் மார்பகத்தில்

51 வைத்த கரதலமும் வாமமருங் கிற்கரமும்
உய்த்த குறங்கில் ஒருகரமும்—மொய்த்த

52 சிறுதொடிசேர் கையு(ம்)மணி சேர்ந்ததடங் கையும்
கறுவுசமர் அங்குசஞ்சேர் கையும்—தெறுபோர்

53 அதிர்கே டகஞ்சுழற்றும் அங்கைத் தலமும்
கதிர்வாள் விதிர்க்குங் கரமும்—முதிராத

54 கும்பமுலைச் செவ்வாய்க் கொடியிடையார் வேட்டணைந்த
அம்பொன் மணிப்பூண் அகன்மார்பும்—பைம்பொற்

55 புரிநூலும் கண்டிகையும் பூம்பட் டுடையும்
அரைஞாணும் கச்சை அழகும்—திருவரையும்

56 நாதக் கழலும் நகுமணிப்பொற் கிண்கிணியும்
பாதத்(து) அணிந்த பரிபுரமும்—சோதி

57 இளம்பருதி நூறு யிரம்கோடி போல
வளந்தருதெய் வீக வடிவும்—உளந்தனிற்கண்(டு)

58 ஆதரிப்போர்க்(கு) ஆருயிராய் அன்பரகத் தாமரையின்
மீதிருக்கும் தெய்வ விளக்கொளியே!—ஓதியஐங்(து)

59 ஓங்காரத் துள்ளொளிக்கும் உள்ளொளியாய் ஐந்தொழிற்கும்
நீங்காத பேருருவாய் நின்றோனே!—தாங்கரிய

60 மந்திரமே சோரியா வான்பதமே மாமுடியாத்
தொந்தமுறும் வன்னமே தொக்காகப்—பந்தனையால்

61 ஒத்த புவனத் துருவே உரோமமாத்
துவங்க ளேசத்த தாதுவா—வைத்த

62 கலையே அவயவமாக் காட்டுமத்து வாவின்
நிலையே வடிவமா நின்றோய்!—பலகோடி

63 அண்டம் உருவாகி அங்கஞ் சராசரமாய்க்
கண்டசத்தி மூன்றுட் கரணமாய்த்—தொண்டுபடும்

64 ஆவிப் புலனுக்(கு) அறி(வு)அளிப்ப ஐந்தொழிலும்
ஏவித் தனிநடத்தும் எங்கோவே!—மேவ

65 வரும்அட்ட மூர்த்தமாம் வாழ்வே! மெய்ஞ் ஞானம்
தரும்அட்ட யோகத் தவமே!—பருவத்(து)

66 அகலாத பேரன்(பு) அடைந்தோர் அகத்துட்
புகலாகும் இன்பப் பொருப்பும்—சுகலளிதப்

67 பேரின்ப வெள்ளப் பெருக்காறும் மீதானம்
தேரின்ப நல்குந் திருநாடும்—பாரின்பம்

68 எல்லாங் கடந்த இருநிலத்துட் போக்குவர(வு)
அல்லா(து) உயர்ந்த அணிநகரும்—தொல்லுலகில்

69 ஈறும் முதலுமகன்(று) எங்குநிறைந்(து) ஐந்தெழுத்தைக்
கூறி நடாத்துங் குரகதமும்—ஏறுமதம்

70 தோய்ந்து களித்தோர் துதிக்கையினல் பஞ்சமலம்
காய்ந்தசிவ ஞானக் கடாக்களிறும்—வாய்ந்தசிவ

71 பூரணத்துட் பூரணமாம் போதம் புதுமலரா
நாரகத்துட் கட்டு நறுந்தொடையும்—காரணத்துள்

72 ஐந்தொழிலும் ஓவா(து) அளித்துயர்ந்த வான்கொடியும்
வந்தநவ நாத மணிமுரசும்—சந்ததமும்

73 நீக்கமின்றி ஆடி நிழலசைப்பான் போற்புவனம்
ஆக்கி அசைத்தருளும் ஆணையும்—தேக்கமழ்ந்து

74 வீசும் பனுவல் விபுதர் தனித்தனியே
பேசுந் தசாங்கமெனப் பெற்றோனே!—தேசுதிகழ்

75 பூங்கயிலை வெற்பில் புனைமலர்ப்பூங் கோதையிடப்
பாங்குறையும் முக்கட் பரஞ்சோதி—ஆங்கொருநாள்

76 வெந்தகுவர்க்(கு) ஆற்ருத விண்ணோர் முறைக்கிரங்கி
ஐந்து முகத்தோ(டு) அதோமுகமும்—தந்து

77 திருமுகங்கள் ஆறுகிச் செந்தழற்கண் ஆறும்
ஒருமுகமாய்த் தீப்பொறிஆ(று) உய்ப்ப—விரிபுவனம்

78 எங்கும் பரக்க இமையோர்கண்(டு) அஞ்சுதலும்
பொங்குந் தழற்பிழம்பைப் பொற்கரத்தால்—அங்கண்
79 எடுத்தமைத்து வாயுவைக்கொண்(டு)ஏகுதியென்(று)எம்மான்
கொடுத்தளிப்ப மெல்லக் கொடுபோய்—அடுத்ததொரு
80 பூதத் தலைவ! கொடு போதியெனத் தீக்கடவுள்
சீதப் பகீரதிக்கே சென்றுய்ப்பப்—போதொருசற்(று)
81 அன்னவளுங் கொண்டமைதற்(கு) ஆற்ருள் சரவணத்தில்
சென்னியிற்கொண்(டு) உய்ப்பத் திருவுருவாய்—முன்னர்
82 அறுமீன் முலையுண்(டு) அழுதுவிளை யாடி
நறுநீர் முடிக்கணிந்த நாதன்—குறுமுறுவற்
83 கன்னியொடும் சென்(று) அவட்குக் காதலுருக் காட்டுதலும்
அன்னவள்கண்(டு) அவ்வுருவம் ஆறினையும்—தன்னிரண்டு
84 கையால் எடுத்தணைத்துக் கந்தனெனப் பேர்புனைந்து
மெய்யாறும் ஒன்ருக மேவுவித்துச்—செய்ய
85 முகத்தில் அணைத்(து)உச்சி மோந்து முலைப்பால்
அகத்துள் மகிழ்பூத் தளித்துச்—சகத்தளந்த
86 வெள்ளை விடைமேல் விமலன் கரத்திலளித்(து)
உள்ளம் உவப்ப உயர்ந்தோனே!—கிள்ளைமொழி
87 மங்கை சிலம்பின் மணியொன் பதில்தோன்றும்
துங்க மடவார் துயர்தீர்ந்து—தங்கள்
88 விருப்பால் அளித்தநவ வீரருக்குள் முன்னோன்
மருப்பாயுந் தார்வீர வாகு—நெருப்பிலுதித்(து)
89 அங்கட் புவனம் அனைத்தும் அழித்துலவும்
செங்கட் கிடாயதனைச் சென்றுகொணர்ந்(து)-எங்கோன்
90 விடுக்குதிஎன்(று) உய்ப்பஅதன் மீதிவர்ந்(து)எண் திக்கும்
நடத்தி விளையாடும் நாதா!—படைப்போன்
91 அகந்தை உரைப்பமறை ஆதி எழுத்தென்(று)
உகந்த பிரணவத்தின் உண்மை—புகன்றிலையால்
92 சிட்டித் தொழிலதனைச் செய்வதெங்ஙன் என்றுமுனம்
குட்டிச் சிறைஇருத்துங் கோமானே!—மட்டவிழும்
93 பொன்னங் கடுக்கைப் புரிசடையோன் போற்றிசைப்ப
முன்னம் பிரமம் மொழிந்தோனே!—கொன்னெடுவேல்

94 தாரகனும் மாயத் தடங்கிரியும் தூளாக
வீர வடிவேல் விடுத்தோனே !—சீரலைவாய்த்
95 தெள்ளு திரைகொழிக்கும் செந்தூரில் போய்க்கருணை
வெள்ள மெனத்தவிசின் வீற்றிருந்து—வெள்ளைக்
96 கயேந்திரனுக்(கு) அஞ்சல் அளித்துக் கடல்சூழ்
மயேந்திரத்திற் புக்(கு)இமையோர் வாழச்-சயேந்திரனும்
97 சூரனைச்சோ தித்துவரு கென்றுதடந் தோள்விசய
வீரனைத்தூ தாக விடுத்தோனே!—காரவுணன்
98 வானவரை விட்டு வணங்காமை யாற்கொடிய
தானவர்கள் நாற்படையும் சங்கரித்துப்—பானுப்
99 பகைவன் முதலாய பாலருடன் சிங்க
முகனைவென்று வாகை முடித்தோய்!—சகமுடுத்த
100 வாரி தனிற்புதிய மாவாய்க் கிடந்தநெடுஞ்
சூருடலங் கீண்ட சுடர்வேலோய்!—போரவுணன்
101 அங்கமிரு கூறாய் அடல்மயிலுஞ் சேவலுமாய்த்
துங்கமுடன் ஆர்த்தெழுந்து தோன்றுதலும்-அங்கவற்றுள்
102 சீறுமர வைப்பொருத சித்ரமயில் வாகனமா
ஏறி நடாத்தும் இளையோனே!—மாறிவரு
103 சேவற் பகையைத் திறல்சேர் பதாகையென
மேவத் தனித்துயர்த்த மேலோனே!—மூவர்
104 குறைமுடித்து விண்ணங் குடியேற்றித் தேவர்
சிறைவிடுத்தாட் கொண்(டு)அளித்த தேவே!-மறைமுடிவாம்
105 சைவக் கொழுந்தே ! தவக்கடலே ! வானுதவும்
தெய்வக் களிற்றைமணஞ் செய்தோனே!—பொய்விரவு
106 காமமுனிந்த கலைமுனிவன் கண்ணருளால்
வாமமட மானின் வயிற்றுதித்துப்—பூமருவு
107 கானக் குறவர் களிகூரப் பூங்குயில்போல்
ஏனற் புனங்காத்(து) இனிதிருந்து—மேன்மைபெறத்
108 தெள்ளித் தினைமாவும் தேனும் பரிந்தளித்த
வள்ளிக் கொடியை மணந்தோனே!—உள்ளமுவந்(து)
109 ஆறு திருப்பதிகண்(டு) ஆறெழுத்தும் அன்பினுடன்
கூறுமவர் சிந்தைகுடி கொண்டோனே!—நாறுமலர்க்

110 கந்திப் பொதும்பர்எழு காரலைக்குஞ் சீரலைவாய்ச்
செந்திப் பதிபுரக்குஞ் செவ்வேளே!—சந்ததமும்

111 பல்கோடி சன்மப் பகையும் அவமிருத்தும்
பல்கோடி விக்கினமும் பல்பிணியும்—பல்கோடி

112 பாதகமும் செய்வினையும் பாம்பும் பசாசுமடற்
பூதமும்தீ நீரும் பொருபடையும்—தீதகலா

113 வெவ்விடமும் துட்ட மிருகமுத லாமெவையும்
எவ்விடம் வந்(து)எம்மை எதிர்ந்தாலும்—அவ்விடத்தில்

114 பச்சைமயில் வாகனமும் பன்னிரண்டு திண்டோளும்
அச்சம் அகற்றும் அயில்வேலும்—கச்சைத்

115 திருவரையும் சீறடியும் செங்கையும் ஈரா(று)
அருள்விழியும் மாமுகங்கள் ஆறும்—விரிகிரணம்

116 சிந்தப் புனைந்த திருமுடிகள் ஓராறும்
எந்தத் திசையும் எதிர்தோன்ற—வந்திடுக்கண்

117 எல்லாம் பொடிபடுத்தி எவ்வரமும் தந்துபுகுந்(து)
உல்லாச மாக உளத்திருந்து—பல்விதமாம்

118 ஆசுமுதல் நாற்கவியும் அட்டாவ தானமும்சீர்ப்
பேசுமியல் பல்காப் பியத்தொகையும்—ஓசை

119 எழுத்துமுத லாம்ஐந் திலக்கணமும் தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமை பாலித்(து)—ஒழுக்கமுடன்

120 இம்மைப் பிறப்பில் இருவா தனைஅகற்றி
மும்மைப் பெருமலங்கள் மோசித்துத்—தம்மைவிடுத்(து)

121 ஆயும் பழைய அடியா ருடன்கூட்டித்
தோயும் பரபோகந் துய்ப்பித்துச்—சேய

122 கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி ஆட்கொண்(டு)
அடியேற்கு முன்னின்(று) அருள்.

திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா

முற்றிற்று

உ

சிவ சிவ

# வாழ்த்து

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

— தேவாரம்.

69976

உ

சிவ சிவ

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்துத் தலைவர்

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்

அவர்கள் நிறுவியுள்ள

# தரும விவரங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | திருமுறை வளர்ச்சிக்காக | 23 | தருமங்கள் | 2,14,000 |
| 2. | கல்வி அபிவிருத்திக்காக | 41 | ,, | 5,49,500 |
| 3. | சைவசித்தாந்தம பரப்ப | 7 | ,, | 1,56,000 |
| 4. | அன்னதானம் செய்ய | 55 | ,, | 15,16,000 |
| 5. | வைத்தியம் செய்ய | 3 | ,, | 1,14,500 |
| 6. | பொது தருமம்-ஸ்நான கட்டம், அகதி நன் கொடை, தண்ணீர்ப் பந்தல், ஒளிவளர் விளக்கு முதலியன. | 27 | ,, | 2,06,863 |
| | ஆகக் கூடுதல் | 156 | தருமங்கள் | 27,56,863 |

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| 27 | நீதிநெறி விளக்கம்-ஆங்கிலம்-ஹிந்தி ... | 0 | 8 |
| 28 | சகலகலாவல்லி மாலை - ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது ... ... | 0 | 1 |
| 29 | சிவஞான சித்தியார் ஆங்கிலமும், ஹிந்தியும் கூடியது ... ... | 5 | 0 |
| 30 | ஷை ஹிந்தி மட்டும் ... ... | 1 | 0 |
| 31 | திருக்குறள்-அறத்துப்பால்-ஹிந்தி மொழி பெயர்ப்பு ... ... | 1 | 8 |
| 32 | ஷை பொருட்பால் ஷை ... ... | 2 | 8 |
| 33 | ஷை காமத்துப்பால் ஷை ... ... | 1 | 0 |
| | ஷை மூன்று புத்தகங்களும் சேர்த்து ... | 4 | 0 |
| 34 | திருக்குறள்-கே. எம். வேங்கடராமையா M. A., B. O. L, அவர்கள் குறிப்புரையுடன் ... | 0 | 12 |
| 35 | முதுமொழிமேல்வைப்பு - ஸ்ரீ வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகள் ... | 0 | 7 |
| 36 | திருவுசாத்தானக் கல்வெட்டுகள் ... | 0 | 6 |
| 37 | திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் - மதுரைக் கலம்பகம் - நீதி நெறி விளக்கம் - மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணி மாலை - மதுரை மீனாட்சியம்மை குறம் ... | 2 | 12 |
| 38 | திருவாரூர் நான்மணிமாலை - முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் ... | 1 | 4 |
| 39 | சிதம்பர மும்மணிக்கோவை - சிதம்பரச் செய்யுட்கோவை - தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணி மாலை ... | 1 | 0 |
| 40 | பண்டார மும்மணிக் கோவை-காசிக் கலம்பகம்-சகலகலாவல்லி மாலை ... | 0 | 8 |
| 41 | தமிழிசைப் பாக்கள் ... | 0 | 8 |

## கிடைக்குமிடங்கள் :

**1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்.**

**2. தியாகராச விலாஸ், திருவல்லிக்கேணி, சென்னை.**

**குறிப்பு :** ஷை விற்பனைத்தொகை 'குமர குருபரன்' பத்திரிகையைச் சாரும்.

ஸ்ரீ

# "குமர குருபரன்"

[தமிழ்த் திங்கள் வெளியீடு]

*ஸ்ரீவைகுண்டம்*
*ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடாலயத்திலிருந்து*

**விரோதி ஆண்டு தை மாதம் முதல்**
*மாதந்தோறும் வெளிவருகிறது*

★

**இது**
**சைவசித்தாந்தம், ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தம்**
**பன்னிரு திருமுறை ஆராய்ச்சி, இலக்கியம்,**
**பிற மொழிகள், கலாசாரம் சம்பந்தமான**
**கட்டுரைகள் கொண்டது**

★

*நிர்வாக ஆசிரியர் :*

**T. M. குமரகுருபரன் பிள்ளை, B. A., B. L.,**
**மானேஜிங் டிரஸ்டி, ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடம்**
*(நிரந்தரத் தலைவர், குமரகுருபரன் சங்கம்)*
**ஸ்ரீவைகுண்டம்.**

**வருட சந்தா ரூ. 1—8—0 தனிப்பிரதி ரூ. 0—2—0**

*இம்பீரியல் அச்சகம், திருச்சிராப்பள்ளி—54.*